டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.. எண்ணிய முடிதல் வேண்டும்..

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 137 11.11.2025 TUESDAY IPPASI : 24 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 137 11.11.2025 செவ்வாய்கிழமை ஐப்பசி : 24 விலை : ரூ.5/–

3 மதுரை மேற்கு ஒன்றியத்தில் திமுக சார்பாக நலத்திட்டங்கள் வழங்கும் விழா : சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் சிறப்புரை

4 கூட்டணிக்கு விருப்பம் தெரிவித்தும் கண்டு கொள்ளாத விஜய் - விரக்தியில் அமமுக

2 "குடும்ப ஆட்சி நடத்தி ஊழல் செய்ய பெரியாரும் அண்ணாவும் சொன்னார்களா?" - திமுகவை கேட்கிறார் தவெகவின் அருண்ராஜ்

## எஸ்ஐஆர் மனு விவகாரத்தில் அதிமுக கபட நாடகம் திருச்சியில் முதல்வர் ஸ்டாலின் காட்டம்

திருச்சி: நவ.11-

"எஸ்.ஐ.ஆருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் திமுக மனு தாக்கல் செய்துள்ளது. அதில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என அதிமுகவும் மனு தாக்கல் செய்துள்ளது. கபட நாடகத்தை நடத்த அதிமுக திட்டமிட்டுள்ளது. உண்மையான அக்கறை இருந்தால் அவர்கள் ஏற்கெனவே வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும்." என தமிழக மு.க.முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருச்சி ஸ்ரீரங்கம் தொகுதி திமுக எம்எல்ஏ இளைய மகன் திருமண விழா சோமரசம்பேட்டையில் நடைபெற்றது. முதல்வர் ஸ்டாலின் திருமணத்தை முன் நின்று நடத்தி வைத்தார். அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ், ரகுபதி, மெய்யநாதன், சிவசங்கர், கீதா ஜீவன், எம்பிக்கள் அ.ராசா, திருச்சி சிவா, துரை வைகோ உட்பட பலர் பங்கேற்றனர்.

திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: ஸ்ரீரங்கம் எம்எல்ஏ பழனியாண்டி திருமணத்தை கலைஞர் நடத்தி வைத்தார். அவரது மகன்கள் திருமணத்தை நான் நடத்தி வைத்தேன். அவர்களது பேரன், பேத்திகள் திருமணத்தையும் நான்தான் நடத்தி வைப்பேன்



என்ற நம்பிக்கை வந்திருக்கிறது.

திமுகவை கழகம் என்று மட்டுமல்ல இயக்கம் என கூறுவார்கள். இயக்கம் என்பதால் நமக்கு ஓய்வே கிடையாது. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொடர்ந்து இயங்கி கொண்டு இருப்பது தான் இயக்கம். சின்ன தடைகளைப் பார்த்து தேங்கினால் தேக்கம் ஆகிவிடும். தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புபவன் நான்.

நம்மை அழிக்க எதிரிகள் புதுப்புது உத்திகளையும், முயற்சிகளையும் செய்து வருகிறார்கள். வருமான வரித் துறை, சிபிஐ என ஏவினார்கள். தற்போது எஸ்.ஐ.ஆர் என்கிற ஆயுதத்தை எடுத்து திமுகவை அழிக்கப் பார்க்கிறார்கள். ஆனால் ஒரு போதும் திமுகவை அவர்களால் அழிக்க முடியாது.

முத்தரையர் சமுதாயத்தினர் மீது கடைக்கண் பார்வையை திருப்புங்கள் என்று அச்சமூகத்தின் பிரதிநிதி செல்லக்குமார் பேசினார். உங்களுக்கு கடைக்கண் பார்வை மட்டுமல்ல, எல்லா பார்வையும் உங்கள் பக்கம் இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சி என்பது எல்லோருக்கும் எல்லாம் என்பது தான். அனைவருக்குமான ஆட்சியாக இந்த ஆட்சி உள்ளது.

டெல்லியில் இருக்கும் பிக்பாஸூக்கு பழனிசாமி ஆமாம் சாமி போட்டு தான் ஆக வேண்டும். எஸ்.ஐ.ஆருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் திமுக மனு தாக்கல் செய்துள்ளது. அதில் தங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என அதிமுகவும் மனு தாக்கல் செய்துள்ளார்கள். கபட நாடகத்தை நடத்த அதிமுக திட்டமிட்டுள்ளது. உண்மையான அக்கறை இருந்தால் அவர்கள் ஏற்கெனவே வழக்கு தொடர்ந்திருக்க வேண்டும். பாஜக என்ன கூறினாலும் அதை அதிமுகவினர் ஆதரிக்கிறார்கள். அதிமுகவின் நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது.

மணமக்கள் நீடுழி வாழவேண்டும். தங்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு அழகிய தமிழ்ப் பெயர்களை வைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



## மின் மயானம் அமைக்க எதிர்ப்பு மார்க்கையன் கோட்டை பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து முற்றுகையிட்டு போராட்டம்

தேனி. நவ.11

தேனி மாவட்டம், மார்க்கையன் கோட்டை பேரூராட்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட எல்லைப்பட்டி கிராமத்தில் மின் மயானம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் ஊர்வலமாக வந்து மார்க்கையன் கோட்டை பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து முற்றுகையிட்டனர்.

எல்லைப்பட்டி 10, 11,12 ஆகிய மூன்று வார்டுகளை சேர்ந்த சுமார் 700 க்கும் வீடுகளில் பொதுமக்கள் வசித்து வருகின்றனர். பேரூராட்சி நிர்வாகத்திற்கு வந்த மின் மயானத்தை, எல்லைப்பட்டி கிராமத்தில் விவசாயிகள் நெல் அறுவடை செய்து வைக்கும் இடத்தில் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது. இதனை கண்டித்து எல்லைப்பட்டி கிராமத்தை சேர்ந்த அனைத்து சமுதாய பொதுமக்கள் பலமுறை மார்க்கையன் கோட்டை பேரூராட்சி நிர்வாகத்திடம் எதிர்ப்பு தெரிவித்து மனு அளித்தனர்.

இதனை மீறி, மின் மயானம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது. இதனை கண்டித்து ஊர்வலமாக வந்த பொதுமக்கள் மார்க்கையன்கோட்டை பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

தொடர்ந்து செயல் அலுவலரிடம் ஊர் பொதுமக்கள் சார்பாக கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

பின்னர் செயல் அலுவலர் உங்களது கோரிக்கையை ஏற்று பரிசீலனை அடிப்படையில் மனுவை ஏற்றதுடன், அப்பகுதி மக்கள் பேரூராட்சி அலுவலகத்தை விட்டு கலைந்து சென்றனர். ஊர் மக்கள் ஒன்று கூடி பேரூராட்சி அலுவலகத்தை முற்றுகை யிட்டதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

## மாவட்ட அளவிலான கலை திருவிழாவில் தனி நபர் நடிப்பு, தனிபாடல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகள் யோகஸ்ரீ, அபிரிதன்யாவை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பாராட்டி வாழ்த்தினார்

சின்னாளபட்டி, நவ.11

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஜான்பால்பள்ளியில் கலைத்திருவிழா நடைபெற்றது. மாவட்ட அளவில் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் பலர் பங்கேற்றனர். இதில் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முருநெல்லிகோட்டை ஊராட்சி ஆசாரிபுதூர் ஊராட்சிஒன்றிய நடுநிலை பள்ளியை சேர்ந்த யோகஸ்ரீ தனிநபர் போட்டியிலும், அபிரிதன்யா தனிப்பாடல் போட்டியிலும் வெற்றிபெற்று முதல்பரிசை பெற்றதோடு மாநில அளவில் கிருஷ்ணகிரியில் நடைபெறும் போட்டிக்கு தேர்வானார். வெற்றிபெற்ற மாணவிகள் பள்ளி தலைமை ஆசிரியர் ராகவன் தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்



ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர். அவர்களை வாழ்த்தி பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் அரசு பள்ளி மாணவர்கள் கல்வி மட்டுமின்றி விளையாட்டுதுறை உட்பட பல துறைகளில் சாதனை படைத்து வருகிறார்கள். வெற்றிபெற்ற மாணவிகள் மென்மேலும் வெற்றிபெற வாழ்த்துகிறேன் என்றார். நிகழ்ச்சியின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச்செயலாளார் பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் முருகேசன், நகர சிறுபான்மையினர் நல அணி அமைப்பாளர் முஜிப், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் ஆசாரிபுதூர் பள்ளி உதவி தலைமையாசிரியர் கார்த்திக், ஆசிரியர்கள் கோகிலாதேவி, அருள்தாஸ் ஜெயந்தி மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## 2026 சட்டமன்ற தேர்தலில் ஆத்தூர் தொகுதி வரலாற்று சாதனை படைக்கும் தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி பேச்சு

### 2021 முதல் 2025 வரை பல சாதனை திட்டங்களை ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நிறைவேற்றியுள்ளார்

சின்னாளபட்டி, நவ.11

2026 சட்டமன்ற தேர்தலில் ஆத்தூர் தொகுதி வரலாற்று சாதனை படைக்கும் என ஆத்தூர் தொகுதியின் தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி பேசியதோடு 2021 முதல் 2025 வரை தொகுதியில் கட்சி பேதமின்றி அனைத்து பொதுமக்களையும் சென்றடையும் வரையில் பல சாதனை திட்டங்களை ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நிறைவேற்றியுள்ளார் என்றார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியின் முடிசூடா மன்னராக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உள்ளார். கடந்த 33 வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வரும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த 5வருடங்களுக்கு முன்பு தமிழகத்தில் அதிமுக ஆட்சி நடைபெற்ற 10 வருடங்களில் நடைபெற்ற இரண்டு தேர்தலிலும் மாபெரும் வெற்றிபெற்றார். 2021ம் சட்டமன்ற தேர்தலில் அமைச்சர் ஐ.பெரியசாமி



அவர்களை எதிர்த்து போட்டியிட்ட அனைவரையும் டெபாசிட் இழக்க செய்ததோடு, சட்டமன்ற தேர்தல் வரலாற்றில் வரலாறு காணாத மாபெரும் வெற்றி பெற்றார். 1லட்சத்து 35ஆயிரத்தி 571 வாக்குகள் கூடுதலாக பெற்றார். அதன்பின்னர் கூட்டுறவுத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு அடித்தட்டு மக்களை சென்றடையும் வகையில், குறிப்பாக கிராமப்புற ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து நலத்திட்டங்களையும் ஆத்தூர் தொகுதியில் செயல்படுத்தியதால், இன்று ஒட்டுமொத்த ஆத்தூர் தொகுதி மக்களின் செல்லப்பிள்ளையாக உள்ளார். வரும் 2026 சட்டமன்ற தேர்தலுக்காக மத்திய அரசு சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக அரசு ஊழியர்கள் வீடு தவறாமல் வாக்காளர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை வழங்கி வருகின்றனர் இந்த பணிகளை திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமையில், ஆத்தூர் தொகுதி தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிபட்டி மணி மற்றும் அப்பகுதியை சேர்ந்த ஒன்றிய செயலாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். தொகுதி முழுவதும் ஆய்வு செய்து, கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசும் போது 2021ம் சட்டமன்ற தேர்தலில் ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் வரலாறு காணாத வெற்றியை பெற்றார். இதுபோல 2026ம் சட்டமன்ற தேர்தலிலும் வரலாறு காணாத வெற்றியை பெறுவார். அதற்கு காரணம் அவர் கடந்த 5வருடங்களாக ஆத்தூர் தொகுதி முழுவதும் செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் தான் என்றார். திமுக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள், அயராது உழைத்து, மாபெரும் சாதனையை மீண்டும் படைக்க 2026 சட்டமன்ற தேர்தலில் அயராது உழைக்க வேண்டும் என்றார்.




# ஆன்லைனில் எஸ்ஐஆர் படிவங்களை நிரப்பும் புதிய வசதி அறிமுகம்: தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்

சென்னை, நவ.11-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான படிவங்களை தேர்தல் ஆணைய இணையதளத்தில் நிரப்பும் வசதி கொண்டுவரப்பட்டுள்ளதாக தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வாக்காளர்கள் வசதிக்காக இந்தியத் தேர்தல் ஆணையம் தனது அதிகாரப்பூர்வ இணையதளமான https://voters.eci.gov.in ல் எஸ்ஐஆர் படிவத்தை ஆன்லைனில் நிரப்புவதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது.

வாக்காளர்கள் தங்களது பதிவு செய்யப்பட்ட செல்போன் எண் அல்லது வாக்காளர் அடையாள அட்டை எண்ணை பயன்படுத்தி இணையதளம் மூலம் உள் நுழைய பதிவு செய்யப்பட்ட செல்போன் எண்ணுக்கு வரும் ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளீடு செய்ய வேண்டும். உள் நுழைந்த பின் னர் அந்த இணைய பக்கத்தில் காட்டப்படும் "Fill Enumeration Form" என்ற இணைப்பினை தேர்வு செய்யலாம்.

இசைன் முறை: இந்த வசதியை வாக்காளர் பட்டியலில் உள்ள பெயரும், ஆதார் அட்டையில் உள்ள பெயருடன் பொருந்தும் வாக்காளர்கள் மட்டுமே பயன்படுத்த இயலும். வெற்றிகரமாக உள்நுழைந்த பிறகு வாக்காளர், இணையப்பக்கத்தில் கோரப்படும் தேவையான விவரங்களை நிரப்ப வேண்டும். சரியான விவரங்களைச் சமர்ப்பித்த பிறகு இணைய பக்கமானது இசைன் (e-sign) பக்கத்துக்கு மாறும். அதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட செல்போன் எண்ணுக்கு ஒரு முறை கடவுச்சொல் அனுப்பப்படும். அந்த ஒரு முறை கடவுச்சொல்லை உள்ளிட்டவுடன், படிவம் வெற்றிகரமாக பதிவேற்றப்படும்.

தங்களது செல்போன் எண்களை பதிவு செய்திருக்கும், மேலும் வாக்காளர் பட்டியல் மற்றும் ஆதார் பதிவுகளில் பெயர் பொருந்தி உள்ள வாக்காளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கரூர் கூட்ட நெரிசல்: சிபிஐயிடம் 2வது நாளாக ஆவணங்களை ஒப்படைத்த தவெக நிர்வாகிகள்



கரூர், நவ.11-

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பாக கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐயிடம் 2வது நாளாக தவெக வழக்கறிஞர், நிர்வாகிகள் ஆவணங்களை ஒப்படைத்தனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப். 27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வழக்கை விசாரித்து வரும் சிபிஐ இதுதொடர்பாக 300க்கும் மேற்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி அக். 30ம் தேதி முதல் கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

கரூரில் இருந்து நவ. 2ம் தேதி இரவு சென்னை சென்ற சிபிஐ குழு நவ. 3ம் தேதி சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் பிரச்சார வாகனத்தின் சிசிடிவி கேமரா பதிவுகள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விபரங்களை உள்ளிட்ட விபரங்களை கேட்டு சம்மன் வழங்கினர். இந்த விபரங்கள் 3 நாட்களில் அளிக்கப்படும் என தவெக நிர்வாகி நிர்மல்குமார் தெரிவித்திருந்தார்.

தவெக பிரச்சார கூட்டத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த உள்ளூர், வெளி மாவட்ட போலீ ஸாரிடம் நவ. 4, 5 ஆகிய இரு நாட்கள், ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் என 25 பேர் சிபிஐ விசாரணைக்கு நவ. 6,7, 8ம் தேதிகளில் ஆஜராகியிருந்தனர்.

கரூர் சுற்றுலா மாளிகைக்கு தவெக வழக்கறிஞர் அரசு, தவெக சென்னை பனையூர் அலுவலக உதவியார் குருசரண், அவருடன் வந்த மற்றொருவர் என 3 பேர் பிரச்சார வாகனத்தின் சிசிடிவி காமரா பதிவு கள் அடங்கிய வீடியோக்கள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விபரங்கள் அடங்கிய ஆவணங்களை நேற்று ஒப்படைத்தனர். மேலும் அதுகுறித்து ஒன்றரை மணி நேரம் சிபிஐயிடம் விளக்கம் அளித்தனர்.

இந்நிலையில் இன்று (நவ. 9ம் தேதி) ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் 3 பேரிடம் விசாரணை நடைபெற்றது. தவெக வழக்கறிஞர் அரசு, சென்னை பனையூர் அலுவலக உதவியாளர் குருசரண், அவருடன் வந்த மற்றொருவர் என 3 பேரும் இன்றும் ஆவணங்களை சிபிஐயிடம் ஒப்படைத்தனர். மேலும் அவர்கள் சமர்பித்த வீடியோ மற்றும் ஆவணங்கள் குறித்து விளக்கம் அளித்துள்ளனர்.

காலை 11.15 மணிக்கு உள்ளே சென்றவர்கள் மதியம் உணவுக்காக வெளியே சென்றுவிட்டு மீண்டும் கரூர் சுற்றுலா மாளிகையில சிபிஐ முன் ஆஜராகி ஆவணங்கள் குறித்து விளக்கி வருகின்றனர்.

# "குடும்ப ஆட்சி நடத்தி ஊழல் செய்ய பெரியாரும் அண்ணாவும் சொன்னார்களா?" - திமுகவை கேட்கிறார் தவெகவின் அருண்ராஜ்

சென்னை, நவ.11-

சேலம் மாவட்டத்தை சேர்ந்த அருண்ராஜ், எம்பிபிஎஸ் பட்டம் பெற்ற மருத்துவர். டிஎன்பிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி பெற்று கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதியில் அரசு மருத்துவ அதிகாரியாக பணியாற்றி உள்ளார். அதனைத் தொடர்ந்து, யுபிஎஸ்சி தேர்வில் தேர்ச்சி பெற்று ஐஆர்எஸ் அதிகாரியாக, இந்திய வருவாய் துறையில் தமிழ்நாடு, பிஹார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் பணியாற்றியவர். கடந்த மே மாதம் விருப்ப ஓய்வு பெற்ற அருண்ராஜ், ஜூன் மாதம் தவெகவில் இணைந்தார். கட்சியின் கொள்கை பரப்பு பொதுச்செயலாளரான அவரிடம் 'இந்து தமிழ் திசை'க்காக பேசினோம். அவர் அளித்த பேட்டியிலிருந்து...

கரூர் சம்பவத்தில் இருந்து விஜய் மீண்டு விட்டாரா? தற்போது என்ன மனநிலையில் இருக்கிறார்?

கரூர் சம்பவத்தில் இருந்து விஜய் மீண்டு வந்துவிட்டார். எத்தனை இடர்பாடுகள், தடைகள் வந்தாலும் அதைக் கடந்து செல்ல வேண்டும் என்ற எண்ணம் விஜய்க்கு தற்போது அதிகமாகிவிட்டது. பொதுக்குழு கூட்டத்தில் விஜய் பேசும் போதே கவனித்திருப்பீர்கள். அவரது உடல்மொழி, பேசும் தொனி என அனைத்திலும், 'நிறை குடம் தளும்பாது' என்ற பழமொழிக்கு ஏற்ப மனதளவில் இன்னும் அவர் வலுவாகி விட்டார்.

விஜய் கரூர் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க எது தடையாக இருந்தது?

கரூருக்கு செல்ல வேண்டும் என்பது தான் அவரது விருப்பம். ஆனால், கரூரில் மண்டபம் கிடைப்பதில் எங்களுக்கு உண்மையாகவே சிக்கல் ஏற்பட்டது. 90 சதவீத மண்டப உரிமையாளர்கள், மண்டபம் கொடுப்பதற்கு தயாராக இல்லை. ஏனென்றால், ஒரு சிலரை அவர்கள் பகைத்து கொள்ள விரும்பாதது தான் காரணம். அதையும் மீறி இரண்டு மண்டபங்களை அடையாளம் கண்டோம். ஆனால், அந்த மண்டபங்களில் சுற்றுச்சுவர் இல்லாமல் இருப்பது உள்ளிட்ட பாதுகாப்பு குறைபாடுகள் இருந்தது. மேலும், காவல்துறையும் 2 மணி நேரம் மட்டும் தான் அனுமதி கொடுத்தார்கள். 41 குடும்பத்தினரை எப்படி 2 மணி நேரத்தில் சந்திப்பது. அதனால், தான் நாங்கள் மாமல்லபுரத்துக்கு அவர்களை அழைத்து வந்தோம்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட ரூ.20 லட்சம் இழப்பீடு தொகையை ஒரு குடும்பம் மட்டும் திருப்பி அனுப்பி விட்டார்களே, ஏன்?

பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் பலரிடம் மாமல்லபுரத்துக்கு செல்ல கூடாது என்பதற்காக, ரூ.30 லட்சம் தருகிறோம். நீங்கள் விஜய்யை சந்திக்க போக வேண்டாம் என சிலர் அவர்களிடம் கூறியுள்ளனர். இன்னும் சிலர், அவர்களை விஜய்யை பார்க்க செல்ல கூடாது என மிரட்டி உள்ளனர். அதையும் மீறி தான் அவர்கள் விஜய்யை சந்திக்க மாமல்லபுரம் வந்திருக்கிறார்கள். அந்த ஒரு குடும்பத்தினர் ஏன் திருப்பி அனுப்பினார்கள் என்று அவர்களிடம் தான் கேட்க வேண்டும்.



கரூர் சம்பவத்துக்கு பிறகு பாஜக அதிமுக கூட்டணி, தவெகவை அவர்கள் பக்கம் இழுக்க முயற்சிப்பதாக கருதுகிறீர்களா?

கூட்டணி விவகாரத்தில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். கொள்கை எதிரி யார் என்று நாங்கள் முதல் மாநாட்டிலே அறிவித்திருக்கிறோம். அதில் எந்த சமரசமும் இல்லை. மாற்றமும் இல்லை.

விஜய் தான் முதல்வர் வேட்பாளர். தவெக தலைமையில் தான் கூட்டணி என்ற தீர்மானம் மூலம் அதிமுகவுடன் கூட்டணி இல்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பீர்களா?

மீண்டும் சொல்கிறேன். தவெக தலைவர் முதல் மாநாட்டில் விடுத்த அறிவிப்பும், கடந்த செயற்குழுவில் நாங்கள் என்ன தீர்மானம் நிறைவேற்றினோமோ அதுவும் தான் எங்கள் கட்சியின் நிலைபாடு.

மாநில, மாவட்ட, தொகுதி நிர்வாகிகள் முதல் ஒன்றிய, கிளை, பாக முகவர்கள் வரை வலுவான கட்டமைப்பை வைத்துள்ள திமுகவை வரவுள்ள தேர்தலில் புதிய கட்சியான தவெக எப்படி சமாளிக்கும்?

முதலில் மக்களுக்கு நல்லாட்சி கொடுக்க வேண்டும். அடிப்படையான சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும். மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். மக்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும். இதை செய்தால் தான் வாக்களிப்பார்களே தவிர, கட்டமைப்பு இருந்தால் மட்டும் யாரும் வாக்களிக்க மாட்டார்கள். திமுக மீது மக்கள் தற்போது கடும் அதிருப்தியில் இருக்கிறார்கள்.

கொள்கையே இல்லாமல் ரசிகர் கூட்டத்தை நம்பி விஜய் அரசியலுக்கு வந்துள்ளதாக விமர்சிக்கிறார்களே?

எங்களை விமர்சிப்பவர்கள் கொள்கை என்ற பெயரில் இன்னும் கொள்ளை அடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். பெரியார் வாழ்க, அண்ணா வாழ்க என சொல்லிக் கொண்டு, குடும்ப ஆட்சியையும், ஊழலும் செய்து கொண்டிருக்கிறார்கள். பெரி யாரும், அண்ணாவும் இதை தான் சொன்னார்களா? புதிய மாற்றத்துக்காக, துணிச்சலான முடிவை எடுத்து திரையுலகில் தனது உச்சத்தை விஜய் விட்டுவிட்டு வந்திருக்கிறார். போகிற போக்கில், கண்ணாடி மாளிகையில் இருந்து கொண்டு கல்லெடுத்து எறிவது போல கொள்கை இல்லாத கட்சி என்று எப்படி கூறலாம்? உண்மையில் கொள்கை இல்லாமல் இருப்பது திமுக தான்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தவெக எதிர்க்க என்ன காரணம்?

இங்கு பிரச்சினையே வெளிப்படை தன்மை இல்லாதது தான். 2024 ல் இதே வாக்காளர் பட்டியலை வைத்து தானே நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. பிரதமராக மோடி தேர்வு செய்யப்பட்டார். அப்படி இருக்கையில், இப்போது என்ன அவசரம். வாக்காளர் பட்டியல் திருத்தம் அவசியமானது தான். அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அதை ஏன் அவசர கதியில் செய்ய வேண்டும்.

விஜய்யின் அடுத்தக்கட்ட மக்கள் சந்திப்பு எப்போது?

மக்கள் சந்திப்புக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது. மக்களை சந்திக்க வேண்டும் என்பதில் விஜய் மிக ஆர்வமாக இருக்கிறார். விரைவில் அறிவிப்பு வெளியாகும்.

# வரி வருவாயிலிருந்து அமெரிக்கர்களுக்கு தலா 2000 டாலர் டிவிடெண்ட் வழங்குவேன்: ட்ரம்ப்



வாஷிங்டன், நவ.11-

கூடுதல் வரிவிதிப்பின் மூலம் அமெரிக்கா டிரில்லியன் கணக்கான டாலர்களை வருவாயாக பெறுவதாகவும், அந்த வருவாயிலிருந்து ஒவ்வொரு அமெரிக்கருக்கும் விரைவில் 2,000 டாலர் ( இந்திய மதிப்பில் தலா ரூ.1.77 லட்சம்) டிவிடெண்ட் (ஈவுத்தொகை) வழங்கப்படும் என்றும் அதிபர் டொனால்டு ட்ரம்ப் உறுதியளித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது சமூக ஊடகப் பதிவில், "கூடுதல் வரி விதிப்பை எதிர்ப்பவர்கள் முட்டாள்கள். எனது தலைமையின் கீழ், அமெரிக்கா உலகின் மிகவும் பணக்கார நாடாக, மிகவும் மதிக்கப்படும் நாடாக, பணவீக்கம் இல்லாத நாடாக மாறியுள்ளது. பங்குச் சந்தையில் வரலாறு காணாத உச்சத்தை அமெரிக்க தொட்டுள்ளது.

கூடுதல் வரிகள் மூலம் டிரில்லியன் கணக்கான டாலர்களை அமெரிக்கா வருவாயாகப் பெறுகிறது. விரைவில் எங்கள் மிகப்பெரிய கடனான 37 டிரில்லியன் டாலரை செலுத்தத் தொடங்குவோம். அமெரிக்காவில் முதலீடுகள் மற்றும் தொழிற்சாலைகள் எல்லா இடங்களிலும் அதிகரித்து வருகின்றன.

கூடுதல் வரியிலிருந்து கிடைக்கும் வருவாய், அதிக வருமானம் ஈட்டுபவர்களைத் தவிர ஒவ்வொரு அமெரிக்கருக்கும் விரைவில் தலா 2,000 டாலர் (டிவிடெண்ட் ஈவுத்தொகை) வழங்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார். இருப்பினும், இந்தப் பணம் எவ்வாறு அல்லது எப்போது விநியோகிக்கப்படும் என்பதைப் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால், வரிகளிலிருந்து கிடைக்கும் பணம் மக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் அதே வேளையில் தேசியக் கடனைக் குறைக்க உதவும் என்று அவர் கூறினார்.




# திருமாவளவனுக்கு 'இசட்' பிரிவு பாதுகாப்பு கோரி அரியலூரில் விசிகவினர் உண்ணாவிரதம்

அரியலூர், நவ.11-

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கு, இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கக்கோரி அக்கட்சியினர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரியலூர் அண்ணாசிலை அருகே, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கு, மத்திய அரசு 'இசட்' பிரிவு பாதுகாப்பும், மாநில அரசுகள் கூடுதல் பாதுகாப்பும் வழங்க வேண்டும் என வலியுறுத்தி விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் இன்று (நவ.10) உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போராட்டத்தில், திருமாவளவனுக்கு அச்சுறுத்தல்கள் அதிகம் உள்ளதால், மத்திய, மாநில அரசுகள் இசட் பிரிவு பாதுகாப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தி பேசி வருகின்றனர். உண்ணாவிரத போராட்டத்துக்கு அக்கட்சியின் அரியலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் அங்கனூர் சிவா தலைமை வகித்துள்ளார். கிழக்கு மாவட்டச் செயலாளர் கதிர்வளவன் உட்பட கட்சி நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

# கள்ள ஓட்டு போட முடியாது என்பதால்தான் திமுக எஸ்ஐஆரை எதிர்க்கிறது: எடப்பாடி பழனிசாமி

கோவை, நவ.11-

"21 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடத்தப்படுகிறது. திமுகவும், அதன் கூட்டணி கட்சிகளும் எஸ்ஐஆர் என்றாலே அலறுகிறார்கள். தகுதியானவர்கள் மட்டும் இடம்பெற்றால் கள்ள ஓட்டு போடமுடியாது என திமுகவினர் இதனை எதிர்க்கிறார்கள். தகுதியானவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே நாங்கள் எஸ்ஐஆரை ஆதரிக்கிறோம்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, "கோவையில் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளார். திமுக ஆட்சியில் பெண்கள், மாணவிகள், சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை. திமுக ஆட்சியில் பாலியல் வன்கொடுமைகள் சர்வசாதாரணமாக நடக்கின்றன. காவல்துறை மீது குற்றவாளிகளுக்கு பயமே இல்லை. இப்போது அரசாங்கம் இருக்கிறதா என்ற கேள்வி மக்களிடத்தில் எழுந்துள்ளது. சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக சீர்குலைந்துள்ளது.




நேற்று விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் ஒரு மாணவனும், மாணவியும் பேசிக்கொண்டிருந்தபோது, மாணவனை அனுப்பிவிட்டு, மாணவியை காவல்துறையினரே பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். திருவண்ணாமலையிலும் காவல்துறையினரே பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் ஈடுபட்டனர்.

திமுக ஆட்சியில் 6,999 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், அதற்கு ரூ.104 கோடி நிவாரணம் கொடுத்ததாகவும் திமுகவின் சமூக நலத்துறை அமைச்சரே பேசியுள்ளார். ஒரு திறமையற்ற, பொம்மை முதல்வரிடம் காவல்துறை இருப்பதால், இப்படியான பாலியல் வன்கொடுமைகள் நடக்கின்றன.

50 மாத திமுக ஆட்சியில் 6,400 கொலைகள் நடந்துள்ளன. தமிழகத்தில் போதைப்பொருள் கலாச்சாரம் திமுக ஆட்சியில் அதிகரித்துள்ளதால், கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துள்ளது. இவ்வளவு கொடுமைகளுக்கு இடையிலும் இதுவரை தமிழக அரசு நிரந்தர டிஜிபியை நியமிக்கவில்லை. தங்களுக்கு வேண்டியப்பட்டவரை டிஜிபியாக்க முயற்சி செய்கிறார்கள்.

21 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடத்தப்படுகிறது. இதற்கு முன்பு 8 முறை இந்த திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் இறந்தவர்கள், வீடு மாறி சென்றவர்கள் பெயர்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளது. இதுபோல உள்ளவர்களை நீக்கி, தகுதியானவர்களை இடம்பெற செய்வதே எஸ்ஐஆர்.

ஆனால், திமுகவும், அதன் கூட்டணிக் கட்சிகளும் எஸ்ஐஆர் என்றாலே அலறுகிறார்கள். காலக்கெடு போதாது என்கிறார்கள். இதற்காக பிஎல்ஓக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர், ஒரு மாதம் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது, எனவே இதில் காலதாமதம் ஏற்பட வாய்ப்பே இல்லை. இறந்தவர்கள், வீடு மாறி சென்றவர்களை நீக்கக் கூடாது என திமுகவினர் சொல்கின்றனர். ஏனெனில் தகுதியானவர்கள் மட்டும் இடம்பெற்றால் கள்ள ஓட்டு போடமுடியாது என திமுகவினர் இதனை எதிர்க்கிறார்கள்.

சென்னையில் கள்ள ஓட்டு போட முயன்ற திமுக நிர்வாகியை முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பிடித்துக்கொடுத்தார். வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் தவறு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். தகுதியானவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே நாங்கள் எஸ்ஐஆரை ஆதரிக்கிறோம்." எனத் தெரிவித்தார்



## மதுரை மேற்கு ஒன்றியத்தில் திமுக சார்பாக நலத்திட்டங்கள் வழங்கும் விழா : சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் சிறப்புரை

மதுரை, நவ.11-

மதுரை மேற்கு ஒன்றியம் தோடனேரி கிராமத்தில் திமுக சார்பாக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி பிறந்த நாளை முன்னிட்டு, நலத்திட்டங்கள் வழங்கு விழா நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் கலந்து கொண்டு, பொது மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். தொடர்ந்து தேனூர், வைரவநத்தம், வயலூர், உள்ளிட்ட ஊராட்சிகளிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் ஒன்றிய செயலாளர் தனசேகர்,வயலூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பார்த்தசாரதி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சித்ராதேவிமுருகன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பரமேஸ்வரி செல்லமுத்து, ஒன்றிய பொருளாளர் ரவி உள்பட திமுக ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



## அலங்காநல்லூரில் அதிமுக சார்பில் பூத் கமிட்டி பாக முகவர் ஆலோசனை கூட்டம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.பி.உதயகுமார் நேரில் ஆய்வு

அலங்காநல்லூர், நவ.11-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் அதிமுக சார்பில் பூத் கமிட்டி (SIR) பாக முகவர் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவரும் திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.பி.உதயகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் நகரச் செயலாளர் அழகுராஜ், மதுரை மேற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் அரியூர் ராதாகிருஷ்ணன், அம்மா பேரவை மாநில துணைச் செயலாளர்கள் வெற்றிவேல், வக்கீல் திருப்பதி, வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா மாணிக்கம், மாநில மகளிரணி செயலாளர் லெட்சுமி, துணைச் செயலாளர்கள் மருதாயி, சாந்தி, ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத், அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் நாட்டாமை சுந்தர், வார்டு செயலாளர்கள் ராகவன், பாஸ்கரன், குருணி பாஸ்கரன், கணேசன், ஆறுமுகம், பொதும்பு கூட்டுறவு முன்னாள் துணைத் தலைவர் ராகுல், சென்னை தொழிலதிபர் தர்மர், மற்றும் நிர்வாகிகள் குமரேசன், தங்கப்பாண்டி,உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..



■ பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக திருச்சிக்கு வருகை புரிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை விமான நிலையத்தில் பொன்னாடை அணிவித்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வரவேற்ற காட்சி.



■ தேனி மாவட்டம், கொடுவிலார்பட்டி தேனி கம்மவார் சங்கம் கலை அறிவியல் கல்லூரியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் (Special Intensive Revision) பணிகள் தொடர்பாக, மின்னணு திரையில் (LED Screen) ஒளிபரப்பு செய்யப்பட்ட குறும்படத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் கல்லூரி மாணவர்களுடன் பார்வையிட்டார்.

## திருச்சியில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு கூட்டம்



திருச்சி, நவ.11-

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள ரவி மீட்டிங் ஹாலில் நடைபெற்றது.கூட்டத்திற்கு தலைமை ஒருங்கிணைப்பாளர் பொள்ளாச்சி பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார், துனை தலைமை ஒருங்கினைப்பாளர்கோவை ரங்கராஜ், ஒருங்கிணைப்பாளர்கள் சார்லஸ், வாசுதேவன், செல்லப் பான்டி, பத்மநாபன், குமரேசன், வாசு தேவன், சாஜீ, மணிராஜ், கிருஷ்ணன், செந்தில் குமார், ராஜ் குமார், ஆதி முலம், முத்துச் செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கீழ்க்கண்ட கோரிக்கைகளை செய்து தர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஊராட்சி செயலாளர்களை SIRபணியில் ஈடுபடுத்க் கூடாது என தீர்மானிக்கப்பட்டது.

கோரிக்கைகள் :

1.கிராம ஊராட்சியில் பணிபுரியும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குனர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கவேண்டும்.

2.கிராம ஊராட்சியில் பணியாற்றும் தூய்மை காவலர்களுக்கு மாதச்சம்பளம் ரூ10000 வழங்க வேண்டும்.

3.கிராம ஊராட்சியில் பணியாற்றும் VPRC,PLF கணக்காளர்களுக்கு தனி நிதி ஒதுக்கீடு செய்து மாததச்சம்பபளம் ரூ10000 வழங்கவேண்டும்.

4.கிராம ஊராட்சியில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்களுக்கு தேர்வுநிலை, சிறப்பு நிலை ஊதியம் வழங்க வேண்டும், ஊதியம் அரசு கருவூலம் மூலம் வழங்கவேண்டும்.

5.கிராம ஊராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். காலிப்பணியிடத்தை நிரப்ப வேண்டும்.


6.தமிழகத்தில் உள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்க வேண்டும் மற்றும் பெரிய கிராம ஊராட்சிகளை பிரித்து புதிய ஊராட்சி களை உருவாக்க வேண்டும்

7.ஒன்றிய அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைத்து ஒன்றியங்களிலும் புதியதாக ஒரு வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடம் உருவாக்க வேண்டும்.

8. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட கணிணி உதவியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கி பணி நிரந்தரம் செய்யவேண்டும்.

9. முழு சுகாதார திட்டம் மாவட்ட, வட்டார ஒருங்கிணைப் பாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை நிறைவேற்றக் கோரி அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் டிசம்பர் 19 ல் சென்னையில் 50000 பேர் கலந்துகொள்ளும் பேரணி நடத்த தீர்மானிக்கப்பட்டது. பிரகதீஸ்வரன் நன்றி கூறினார்.



## வலசை கம்மாளபட்டி கிராமத்தில் சின்ன கருப்பு சுவாமி கோவில் கும்பாபிஷேக விழா

அலங்காநல்லூர், நவ.11-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே வலசை கம்மாளப்பட்டியில் அமைந்துள்ள பொருசுபட்டி பங்காளிகள் கோப்புலட்டான் வகையறா க்களுக்கு பாத்தியப்பட்ட, ஸ்ரீ சின்ன கருப்பு சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இரண்டு கால யாகசாலை ஹோம ங்களை தொடர்ந்து, யாக சாலையில் இருந்து வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடாகி அழகர் கோவில், ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் கோவிலை சுற்றி வலம் வந்து, சுவாமிகள் மீது ஊற்றப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுற்று வட்டார கிராமங் களை சேர்ந்த ஏராள மான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது.



■ திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசு மருத்துவமனையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு



■ திருப்பூர் மாவட்டம், உடுமலை ஒன்றியத்திற்குட்பட்ட குரல்குட்டை ஊராட்சியில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினரும் திருப்பூர் தெற்கு மாவட்டம் கழக பொறுப்பாளருமான கே.ஈஸ்வரசாமி, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குரல்குட்டை ஊராட்சியில் மடத்தூர் பிரிவில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது. சந்தோஷ்கார்டன் அருகில் காங்கிரட் தளம் அமைக்க பூமி பூஜை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் செந்தில்குமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனிதா தம்பு, குரல்குட்டை ராமசாமி பி.டி.ஓ. அரசு துறை அதிகாரிகள் குரல் குட்டை ஊராட்சி கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## ஆன்லைன் வர்த்தகத்தை தடை செய்யும் மசோதாவை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும்

### தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை டைமன் ராஜா வெள்ளையன்

திருச்சி, நவ.11-

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநில பொதுக்குழு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில தலைவர் டைமன் ராஜா வெள்ளையன் தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். திருச்சி மாவட்ட தலைவர் மாமுண்டி கூழையன் வரவேற்றார். ,

மாநில அவைத் தலைவர் தேவராஜ், மாநில அமைப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில தலைமை நிலைய செயலாளர் கிச்சா ரமேஷ் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் உள்நாட்டு வர்த்தகத்தை சீர்குலைக்க கூடிய அந்நிய வர்த்தக நிறுவனங்களை தமிழகத்திற்குள் அனுமதிக்க கூடாது. ஆன்லைன் வர்த்தகத்தை தடை செய்யும் மசோதாவை சட்டமன்றத்தில் மாநில அரசு நிறைவேற்ற வேண்டும்.



அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் மருத்துவத்திற்கான ஜிஎஸ்டி வரியை முற்றிலும் குறைக்க வேண்டும். விலைவாசி ஏற்றத்திற்கு முக்கிய காரணமாக உள்ள சுங்க சாவடிகளை முற்றிலும் அகற்ற வேண்டும். சாலையோர வியாபாரிகளுக்கு தனி இடம் ஒதுக்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை காக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி மாவட்ட நிர்வாகிகள் மார்க்கெட் எஸ் வெங்கடேசன், பெருமாள் சங்கர், எஸ்.டேவிட், ரூபன் கோவிந்தராஜ் எம்.நௌஷாத், எஸ்.பி.சரவணன்,ப.சங்கர் கன்டோன்மென்ட் கார்த்திக், வீரசேகர் நாகராஜ், பிரவின்குமார், தமிழ், சாமுவேல், ஜெயசீலன், அரவிந், லால்குடி கார்திக், மார்க்கெட் மாரிமுத்து, வரகனேரி மோகன், மார்க்கட் ஹரி, சிம்க்கா ரேவந்த், டோல்கேட் விவேகானந்தன், வம்சம் ப்ராப்பர்ட்டி அஜ்முகமது, அப்துல் கலாம், அபுல் ஹாசன், ஹசன், பிரசாத் ஆகியோர் நிகழ்ச்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர், இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாநில பொருளாளர் ஹரிகிருஷ்ணன் நன்றி கூறினார்.

## திருப்பூர் பெருமாநல்லூர் தேவராயன் CBSE பள்ளியில் தாத்தா பாட்டிகள் தினக் கொண்டாட்டம்

திருப்பூர், நவ.11-

திருப்பூர் மாவட்டம், அவிநாசி தாலுகா பெருமாநல்லூர் தேவராயன் CBSE பள்ளியில் தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவினை பள்ளி முதல்வர் பாலமுருகன் வரவேற்று துவக்கி வைத்தார். விழாவின் சிறப்பு விருந்தினராக அவிநாசி AKVN மருத்துவமனை மருத்துவர் தேவி கலந்து கொண்டார். இவ்விழாவில் மழலையர் வகுப்பு மாணவர்களின் தாத்தா பாட்டிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவிற்கு வருகை தந்த அனைத்து தாத்தா பாட்டிகளையும் தங்களது பேரக் குழந்தைகள் வாழ்த்து அட்டை மற்றும் மலர்களை கொடுத்து வரவேற்றனர். அதன் பிறகு பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பதாகைகளில் தங்களது பேரக் குழந்தைகளுடன் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். மழலையர் பிரிவு மாணவன் தல்ஹா ரசான் வரவேற்புரை ஆற்றினார். பின்பு சிறப்பு விருந்தினர் அனைவருக்கும் தனது வாழ்த்தினைத் தெரிவித்ததுடன் புற்று நோய், அதிலிருந்து




பாதுகாக்கும் வழிமுறைகள் மற்றும் தடுப்பூசிகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் கஜானந்தா அறக்கட்டளையின் மேலாளர் பழனிசாமி சிறப்புரையாற்றினார். பின்பு தாத்தா பாட்டிகள் தங்களது பேரக் குழந்தைகளோடு மகிழ்ச்சியுடன் விளையாடினர். இசை நாற்காலி விளையாட்டுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. மழலையர் வகுப்பு மாணவி கனிஷ்கா நன்றி கூறினார். இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பள்ளி நிர்வாகத்தின் சார்பில் சிறப்பு நினைவுப் பரிசாக புத்தகங்கள் வழங்கப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் பள்ளியின் தாளாளர் தி சென்னை சில்க்ஸ் இன் நிர்வாக இயக்குநர் ஆறுமுகம், நிர்வாக உறுப்பினர்கள் பிரசன்னா அங்குராஜ் மற்றும் கண்ணபிரான் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். விழாவினை மழலையர் பிரிவு ஆசிரியர்கள் லட்சுமி, சரண்யா, லக்ஷ்மி பிரியா மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் சிவானந்தம், மஞ்சுளா ஆகியோர் ஒருங்கிணைத்தனர். மேலும் விழாவிற்கான ஏற்பாடுகளைப் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# கூட்டணிக்கு விருப்பம் தெரிவித்தும் கண்டு கொள்ளாத விஜய் - விரக்தியில் அமமுக



சென்னை, நவ.11-

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தவெக வுடன் கூட்டணி வைக்க தொடர்ந்து விருப்பம் தெரிவித்து வரும் நிலையில், தவெக தலைவர்கள் கண்டுகொள்ளாதது அமமுகவினரை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

தமிழகத்தில் 2026ல் நடைபெறும் சட்டப் பேரவை தேர்தலுக்கு அனைத்து கட்சிகளும் தயாராகி வருகின்றன. இந்த தேர்தலில் புதிய வரவாக நடிகர் விஜயும் களமிறங்குவதால், கூடுதல் பரபரப்பு தொற்றிக்கொண்டுள்ளது. கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்துக்கு பிறகு ஒரு மாதமாக வெளியே வராமல் இருந்தார் விஜய்.

கூட்ட நெரிசலுக்கு தவெகவையும் விஜய்யையும் பல கட்சிகளும் குறை கூறிய நிலையில், தவெக தரப்பு அடக்கியே வாசித்தது. அதிமுக, பாஜக கட்சிகள் விஜய் மீது தவறு இல்லை என்று கூறி வந்தன. இதனால், அதிமுக கூட்டணிக்கு விஜய் செல்வார் என்று பேச்சுகள் எழுந்த நிலையில், சமீபத்தில் நடைபெற்ற தவெக பொதுக்குழு கூட்டத்தில் விஜய் தான் முதல்வர் வேட்பாளர் என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அதிமுக, பாஜக கட்சிகள் ஏமாற்றம் அடைந்துள்ளன.

அதிமுகவுடன் பாஜக கூட்டணி அமைத்த நிலையில், டிடிவி தினகரனை எதிரியாகக் கருதும் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, கூட்டணியில் தினகரன் நீடிப்பதை விரும்பவில்லை. அதன் பிறகு பிரதமர் மோடி, அமித் ஷா ஆகியோர் தமிழகம் வந்தபோதுகூட தினகரனுக்கு அழைப்பு இல்லை. சூழலை உணர்ந்து கொண்ட தினகரன், பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறினார். பழனிசாமி உறுதியாக இருப்பதால், அதிமுக ஒருங்கிணைப்பு முயற்சிகளிலும் எந்த முன்னேற்றமும் இல்லை.

அதிமுக பாஜக கூட்டணி பக்கமும் கதவடைப்பு, திமுக அணியிலும் சேர முடியாத நிலை. தனித்து நின்றால் தோல்வி என்ற நிலையில், சமீபகாலமாக, 2026 தேர்தலில் விஜய் மாற்றத்தை ஏற்படுத்துவார் என்று தினகரன் கூறி வந்தார். இப்போது, விஜய்யின் வருகை, அதிமுகவை 2026 தேர்தலில் 3ம் இடத்துக்கு தள்ளும் என கூறி வருகிறார். தவெகவுக்கு ஆதரவான கருத்துக்களை கூறுவதன் மூலம் அக்கட்சியுடன் கூட்டணி அமைக்க தினகரன் தொடர்ந்து தனது விருப்பத்தை மறைமுகமாக தெரிவித்து வருகிறார்.

இருப்பினும் தேர்தல் நெருங்கும்போது பார்த்துக்கொள்ளலாம், கொஞ்சம் இழுத்து பிடிப்போம் என்று விஜய் கருதுவதாக, தவெக வட்டாரங்கள் கூறுகின்றன. தங்கள் விருப்பத்தை தெரிவித்தும், விஜய் கண்டுகொள்ளாதது அமமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தி இருப்பதாக கூறப்படுகிறது. இருப்பினும் தினகரன், தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல தொடர்ந்து விஜய்க்கு தூது அனுப்பி கூட்டணி விருப்பத்தை தெரிவித்து வருவதாகவும், ஆனால் விஜய் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# கோயம்புத்தூரில் நடைபெற்ற 16வது மாநாட்டில் சிஐடியு தொழிற்சங்கத்தின் மாநிலத் தலைவராக ஜி.சுகுமாறன் தேர்வு

கோவை, நவ.11-

கோவையில் நடந்த சிஐடியு தொழிற்சங்க மாநாட்டில் மாநிலத் தலைவராக ஜி.சுகுமாறன், பொதுச் செயலாளராக எஸ்.கண்ணன் உட்பட 41 பேர் கொண்ட புதிய நிர்வாகிகள் குழு தேர்வு செய்யப்பட்டது. சிஐடியு தொழிற்சங்கத்தின் 16வது மாநில மாநாடு கடந்த 6ம் தேதி கோவையில் தொடங்கியது. தொடர்ந்து நடந்த பொது மாநாடு மற்றும் பிரதிநிதிகள் மாநாட்டில், மாநிலத் தலைவர் அ.சவுந்தரராஜன் மற்றும் பல்வேறு தொழிற்சங்க நிர்வாகிகள் பேசினர்.




இரண்டாம் நாள் நடந்த பிரதிநிதிகள் மாநாட்டில், மூத்த தொழிற்சங்கத் தலைவர் டி.கே.ரங்கராஜன், அகில இந்தியதுணைத் தலைவர் ஏ.கே.பத்மநாபன், விவசாயிகள் சங்கத் தலைவர் டி.ரவீந்திரன், விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர் எம்.சின்னதுரை, அகில இந்திய செயலாளர் ஆர்.கருமலையான் ஆகியோர் பேசினர்.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும். 8 மணி நேர வேலை நேரத்தை உயர்த்தும் முயற்சிகளைக் கைவிட வேண்டும். அரசுத் துறைகளில் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாடு நேற்று நிறைவடைந்த நிலையில், 41 பேர் கொண்ட சிஐடியு புதிய மாநில நிர்வாகிகள் குழு தேர்வு செய்யப்பட்டது.

மாநிலத் தலைவராக ஜி. சுகுமாறன், பொதுச் செயலாளராக எஸ்.கண்ணன், பொருளாளராக எஸ்.ராஜேந்திரன், உதவி பொதுச் செயலாளர்களாக வி.குமார், கே.திருச்செல்வன், கே.ஆறுமுகநாயினர், இ.முத்துக்குமார், மாநிலத் துணைத் தலைவர்களாக அ.சவுந்தரராசன், மாலதி சிட்டிபாபு, கே.விஜயன், எம்.சந்திரன் ,பி.கருப்பையன், டிஉதயகுமார், ஏ.கிருஷ்ணமூர்த்தி, ஏ.ஜானகிராமன், எம்.மகாலஷ்மி, எஸ்.கே.மகேந்திரன் உள்ளிட்ட 17 பேரும், செயலாளர்களாக கே.சி.கோபிகுமார், கே.ரங்கராஜ், பி.என் .தேவா, எஸ்.கிருஷ்ணமூர்த்தி. எம்.தனலட்சுமி உள்ளிட்டோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து, நேற்று மாலை நடந்த பேரணியில் சிஐடியு நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்றனர். கோவை சிவானந்தா காலனியில் பேரணி நிறைவடைந்தது.

பின்னர் அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிஐடியு அகில இந்திய தலைவர் கே. ஹேமலதா, பொதுச் செயலாளர் தபன் சென், தேசிய செயலாளர் ஆர்.கருமலையான் உள்ளிட்டோர் பேசினர்.சிஐடியு தொழிற்சங்க மாநில மாநாட்டு நிறைவையொட்டி கோயம்புத்தூரில் நேற்று நடைபெற்ற பேரணியில் பங்கேற்றோர்.

# கொடநாடு விவகாரத்தில் சட்டப்படி நடவடிக்கை: துரைமுருகன் உறுதி



காட்பாடி, நவ.11-

தமிழக அமைச்சர் துரைமுருகன் வேலூர் மாவட்டம் காட்பாடியில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: கொடநாடு எஸ்டேட் கொலை, கொள்ளை விவகாரத்தில் பூச்சாண்டிகளுக்கு அஞ்ச மாட்டேன் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறியுள்ளார். தமிழக அரசு இந்த விவகாரத்தை சட்டப்படி அணுகும்.

கரூர் விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் அரசியல் ஆதாயம் தேடுவதாக தவெக தலைவர் விஜய் விமர்சித்துள்ளது வேடிக்கையாக உள்ளது. 41 பேர் உயிரிழப்புக்கு காரணமாக இருந்துவிட்டு, பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளுக்கு ஆறுதல் செல்லக்கூட செல்லாமல் இருந்தவர் மனிதாபிமானம் உள்ளவரா? தேவையான அனைத்து உதவிகளையும் செய்த நாங்கள் மனிதாபிமானம் இல்லாதவர்களா? இவ்வாறு துரைமுருகன் கூறினார்.

# “ஜெயலலிதா மன்னிக்கும் தன்மை கொண்டவர்” கோபியில் செங்கோட்டையன் பேட்டி



ஈரோடு, நவ.11-

ஜெயலலிதா மன்னிக்கும் தன்மை படைத்தவர். உழைப்பவர்களை எவராலும் வீழ்த்த முடியாது என முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் இன்று முன்னாள் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: அதிமுக என்ற இயக்கம் எம்ஜிஆர் மற்றும் ஜெயலலிதா ஆகிய இரு தலைவர்களால் வளர்த்த இயக்கமாகும். பல்வேறு தியாகங்கள் செய்து தான் அவர்கள் இந்த இயக்கத்தை வளர்த்தனர். பல பேர் நன்றி மறந்து சென்று விட்டனர்.

ஜெயலலிதா மன்னிக்கும் தன்மை படைத்தவர். கடந்த 1989ம் ஆண்டு தனது, நகை பொருட்களை வழங்கி கட்சியை வலிமைப்படுத்தினார். உழைப்பவர்களை எவராலும் வீழ்த்த முடியாது. ஜெயலலிதா வழியில் தொடர்ந்து பயணித்து வருகிறேன். தொண்டர்களை காக்க என்ன செய்ய வேண்டுமோ அந்த பணியை அவர் செய்து வந்தார்.

விரைவில் சோதனைகளை சாதனைகளாக மாற்றுவோம். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற அடிப்படையில் நான் 45 ஆண்டு காலம் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து மக்களுக்காக பணியாற்றி வருகிறேன். நான் இளவரசர் போல இல்லை. எளிமையாக தான் இருந்து வருகிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து வருகிறேன்” என்றார்.

# தமிழக காவல் துறையில் இரண்டாம் நிலை காவலர் பணி: 3,665 காலியிடங்களுக்கு போட்டித் தேர்வு

சென்னை, நவ.11-

தமிழக காவல் துறையில் காலியாக உள்ள 3,665 காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வில் 1.96 லட்சம் பேர் பங்கேற்றனர்.

தமிழக காவல் துறையில் காலியாக உள்ள 2,837 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்கள்,சிறைத்துறையில் 180 காலி பணியிடங்கள், தீயணைப்பு துறையில் 631 பணியிடங்கள் உள்பட மொத்தம் 3,665 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் ஆக.21ல் வெளியிட்டது.

இதற்கு 10ம் வகுப்பு தேர்ச்சி கல்வி தகுதியாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 10ம் வகுப்பு முடித்தவர்கள் மட்டுமின்றி பொறியாளர்கள், பட்டதாரிகள், தனியார் நிறுவன ஊழியர்கள் உள்பட சுமார் 2.50 லட்சம் பேர் விண்ணப்பித்தனர். அதில், தகுயுடைய 2 லட்சத்து 24,711 லட்சம் பேருக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டது.

இதையடுத்து திட்டமிட்டபடி நேற்று தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்களில் 45 தேர்வு மையங்களில் நேற்று காலை தேர்வு நடைபெற்றது. இதை 1 லட்சத்து 96,161 பேர் எழுதினர். 28,550 பேர் பங்கேற்கவில்லை. முன்னதாக தேர்வர்கள் காலை 6 மணிக்கே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையங்களுக்கு வந்தனர். காலை 8 மணி முதல் தீவிர சோதனைக்குப் பிறகு தேர்வு மையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். செல்போன்கள், ஸ்மார்ட்வாட்ச், கால்குலேட்டர் உள்பட எலெட்ரானிக் உபகரனங்கள் அனுமதிக்கப்படவில்லை.

பறக்கும் படையினர் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். தேர்வு வளாகம் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டது. சென்னையில் அண்ணாபல்கலை. வளாகம், தரமணி மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி உள்பட 10 மையங்களில் தேர்வு நடைபெற்றது. இதில், 1,772 பெண்கள் உட்பட 8,090 பேர் எழுதினர். பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்ஆணையர் அருண் மேற் கொண்டிருந்தார்.

அமைதியான முறையில் தேர்வு நடைபெற்று முடிந்தது.தேர்வு எளிதாக இருந்தாக தேர்வர்கள் கருத்து தெரிவித்தனர். எழுத்துத் தேர்வில் வெற்றி பெறுபவர்கள் அடுத்தகட்டமாக உடல்தகுதி தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

# யுஜிசி நெட் தேர்வு விண்ணப்பங்களில் திருத்தம் செய்ய வாய்ப்பு




சென்னை, நவ.11-

நடப்பாண்டுக்கான 2ம் கட்ட யுஜிசி நெட் தேர்வு. டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு கடந்த அக்டோபர் 8ம் தேதி தொடங்கி நவம்பர் 7ம் தேதியுடன் முடிவடைந்தது.

தற்போது பட்டதாரிகள் விண்ணப்பங்களில் திருத்தம் செய்வதற்கு என்டிஏ வாய்ப்பு வழங்கியுள்ளது. விருப்பமுள்ளவர்கள் /ugcnet.nta.nic.in/ என்ற இணையதளம் வழியாக விண்ணப்பங்களில் நவம்பர் 12ம் தேதிக்குள் திருத்தங்கள் செய்துகொள்ள வேண்டும் என்று என்டிஏ தெரிவித்துள்ளது.

# கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு: சிபிஐ விசாரணைக்கு பவர் கிரிட் அதிகாரிகள் ஆஜர்



கரூர், நவ.11-

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பாக கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐ விசாரணைக்கு தமிழ்நாடு பவர் கிரிட் கார்ப்பரேஷன் அதிகாரிகள் 2 பேர் ஆஜராகினர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப். 27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வழக்கை விசாரித்து வரும் சிபிஐ இதுதொடர்பாக 300க்கும் மேற்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி அக்.30ம் தேதி முதல் கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது.

அக்.31 மற்றும் நவ 1ம் தேதி ஆகிய இரண்டு நாட்கள் 3டி லேசர் ஸ்கேனர் மூலம் சாலையை சிபிஐயினர் அளவீடு செய்தனர். வேலுசாமிபுரத்தில் கடை வைத்திருப்பவர்கள், நிறுவனம் நடத்தி வருபவர்கள், தவெக பிரச்சாரக் கூட்டத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த உள்ளூர், வெளி மாவட்ட போலீஸார், ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில் நவ.2ம் தேதி காமராஜபுரத்தில் ராம்குமார் என்பவரை தேடிச் சென்ற சிபிஐ குழு, அவர் இல்லாததால் 3 பேர் கொண்ட குழு ரயில் மூலம் சென்னை சென்றனர். அங்கு சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்துக்குச் சென்ற சிபிஐ ,விஜய் பிரச்சார வாகனத்தின் சிசிடிவி கேமரா பதிவுகள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விவரங்களைக் கேட்டு சம்மன் வழங்கினர்.

இதையடுத்து நவ.8 மற்றும் 9ம் தேதி ஆகிய இரு நாட்கள் தவெக வழக்கறிஞர் பிரிவு திருச்சி மண்டல இணைச் செயலாளர் வழக்கறிஞர் அரசு, தவெக சென்னை பனையூர் அலுவலக உதவியார் குருசரண், அவருடன் வந்த மற்றொருவர் என 3 பேர் பிரச்சார வாகனத்தின் சிசிடிவி கேமரா பதிவுகள் அடங்கிய வீடியோக்கள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விவரங்கள் அடங்கிய ஆவணங்களை சிபிஐயிடம் சனிக்கிழமை ஒப்படைத்தனர். மேலும் அதுகுறித்து ஒன்றரை மணி நேரம் சிபிஐயிடம் விளக்கம் அளித்தனர்.

தொடர்ந்து 2வது நாளாக சிபிஐ கேட்ட அனைத்து ஆவணங்களையும் நேற்று காலை 11.15 மணிக்கு கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐயிடம் ஒப்படைத்துவிட்டு, அதுகுறித்து விளக்கினர். மதிய உணவு இடைவேளைக்கு பிறகு மீண்டும் மதியம் 3.30 மணிக்கு கரூர் சுற்றுலா மாளிகைக்கு சென்ற வழக்கறிஞர் அரசு, குருசரண் உள்ளிட்ட 3 பேரும் சிபிஐக்கு விளக்கங்கள் அளித்த பின் நேற்றிரவு 8.50 மணிக்கு வெளியே வந்தனர்.

இந்நிலையில் இன்று (நவ.10) கரூர் மாவட்டம் க.பரமத்தியில் செயல்படும் மத்திய மின் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பவர் கிரிட் கார்ப்பரேஷன் அதிகாரிகள் இருவர் சிபிஐ விசாரணைக்கு காலை 10 மணிக்கு ஆஜராகினர். அவர்களிடம் மின் விநியோகம், மின் துண்டிப்பு உள்ளிட்டவை தொடர்பான விசாரணை நடைபெற்றது. மேலும் ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் என 6க்கும் மேற்பட்டவர்கள் விசாரணைக்கு ஆஜராகினர்.

# தூத்துக்குடியில் நடப்பாண்டில் 19 லட்சம் டன் உப்பு உற்பத்தி: விலை குறைவால் உப்பளங்களில் தேக்கம்



தூத்துக்குடி, நவ.11-

நடப்பாண்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் 19 லட்சம் டன் அளவுக்கு உப்பு உற்பத்தி நடந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். தூத்துக்குடி மாவட்டத்தில் வேம்பார், தூத்துக்குடி, முத்தையாபுரம், முள்ளக்காடு, ஆறுமுகநேரி பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கரில் உப்பளங்கள் அமைந்துள்ளன.

இவற்றில் சுமார் 30 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். ஆண்டுக்கு சராசரியாக 25 லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நாட்டின் உப்பு உற்பத்தியில் குஜராத் மாநிலத்துக்கு அடுத்தபடியாக தூத்துக்குடி மாவட்டம் உள்ளது.

இங்கு ஜனவரி மாதம் உப்பு உற்பத்திக்கான பணிகள் தொடங்கும். ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை 6 மாதங்கள் தான் உப்பு உற்பத்திக்கான உச்சகட்ட காலங்கள். அக்டோபர் மாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கியதும் உப்பு சீசன் முடியும். கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை ஜனவரி மாதம் கடைசி வாரம் வரை நீடித்துள்ளது. இதன் காரணமாக உப்பு உற்பத்திக்கான பணிகள் தாமதமாகவே தொடங்கின.

இந்த ஆண்டு மே 15ம் தேதி வரை மழை குறுகிட்டதால் உப்பு உற்பத்தி சரியாக நடைபெறவில்லை. ஆனால், மே 15ம் தேதிக்கு பிறகு உப்பு உற்பத்திக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. அதன் பிறகு அக்டோபர் 15 வரை உப்பு உற்பத்தி அமோகமாக நடைபெற்றது. கடந்த ஆண்டு 50 சதவீதம் மட்டுமே உப்பு உற்பத்தியாகி இருந்த நிலையில், இந்த ஆண்டு உப்பு உற்பத்தி 75 சதவீதத்தை கடந்துள்ளது. வடகிழக்கு பருவமழை அக்டோபர் 16ல் தொடங்கியதை தொடர்ந்து நடப்பு உப்பு உற்பத்தி சீசன் முடிவுக்கு வந்துள்ளது.

இதையடுத்து உற்பத்தி செய்யப்பட்ட உப்பை மழையில் இருந்து பாதுகாக்கும் வகையில், உப்பளங்களில் உள்ள உப்பு குவியல்களை பிளாஸ்டிக் ஷீட் போட்டு மூடி வைத்துள்ளனர். வடகிழக்கு பருவமழை முழுமையாக முடிவடைந்த பிறகே அடுத்த சீசனுக்கான பணிகள் தொடங்கும். தூத்துக்குடி சிறிய அளவு உப்பு உற்பத்தியாளர் சங்க முன்னாள் செயலாளர் ஏ.ஆர்.ஏ. எஸ்.தனபாலன் ‘இந்து தமிழ் திசை’ செய்தியாளரிடம் கூறியதாவது: வடகிழக்குப் பருவ மழைக் காலம் தொடங்கி யதையடுத்து தூத்துக்குடி மாவட்டத்தில் உப்பு உற்பத்தி முடிவுக்கு வந்துள்ளது.

மாவட்டத்தில் இந்த ஆண்டு உப்பு உற்பத்தி தாமதமாக தொடங்கினாலும், கடைசி 4 மாதங்கள் நன்றாக இருந்தது. இதனால் இந்த ஆண்டு 75 சதவீதத்துக்கு மேல், அதாவது 19 லட்சம் டன் உப்பு உற்பத்தியாகியுள்ளது.

அதேநேரத்தில் இந்த ஆண்டு இதுவரை சுமார் 7 லட்சம் டன் உப்பு மட்டுமே விற்பனையாகியுள்ளது. 12 லட்சம் டன் உப்பு, உப்பளங்களில் இருப்பில் உள்ளது. குஜராத் உப்பு குறைந்த விலைக்கு கிடைத்ததால், தூத்துக்குடி உப்பு அதிகளவில் தேங்கியுள்ளது. அடுத்த ஆண்டு சீசன் தாமதமாக மார்ச் மாதம் தொடங்கினால், கையிருப்பில் இருக்கும் உப்பு காலியாக வாய்ப்பு உள்ளது.

விலையை பொறுத்தவரை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் ஒரு டன் உப்பு ரூ.3,000 முதல் ரூ.3,500 வரை விற்பனையான நிலையில், தற்போது தரத்தை பொறுத்து ரூ.2,000 முதல் ரூ.2,500 வரையே விலை போகிறது. இந்த விலை அடுத்த மாதம் சற்று உயருவதற்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000